பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

20 09 2024 **FRIDAY** **7.15 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

- வேளாண்சார் தொழில்களுக்கு ஊக்கம் அளிப்பதன் மூலம், விவசாயிகளின் வருவாயை மேலும் அதிகரிக்க முடியும் என்று குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

- வங்கிகளின் வளர்ச்சிக்கு யுபிஐ பணபரிவர்த்தனை முறையை அதிக அளவில் பயன்படுத்த வேண்டும் என்று நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் கேட்டுக்கொண்டுள்ளார்.

- திருப்பதி லட்டு விவகாரம் தொடர்பாக, ஆந்திர மாநில அரசிடம் அறிக்கை கோரப்பட்டிருப்பதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

- தமிழில் பெயர் பலகை வைக்காத வணிக நிறுவனங்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று தமிழக அரசு தெரிவித்துள்ளது.

- காமன்வெல்த் பளுதூக்கும் சாம்பியன் போட்டியில் இந்தியா 23 தங்கம், 12 வெள்ளி, இரண்டு வெண்கலப்பதக்கங்களை வென்றது.

<<<<<<<<>>>>>>>>>

வேளாண்சார் தொழில்களுக்கு ஊக்கம் அளிப்பதன் மூலம், விவசாயிகளின் வருவாயை மேலும் அதிகரிக்க முடியும் என்று குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

ஜார்க்கண்ட் தலைநகர், ராஞ்சியில் இன்று இந்திய வேளாண் ஆராய்ச்சி நிறுவனத்தின் நூற்றாண்டு விழா கொண்டாட்டங்களில் பங்கேற்று அவர் பேசினார்.

இந்த நிறுவனம் வேளாண்மையுடன் தொடர்புடைய ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்வதோடு மட்டுமல்லாமல், அதன் பயன்கள் விவசாயிகளை சென்றடைவதை உறுதி செய்வதாக அவர் பாராட்டு தெரிவித்தார்.

நாட்டின் அரக்கு உற்பத்தியில் 55 சதவீதம் ஜார்க்கண்ட் மாநிலத்தில் உற்பத்தி செய்யப்படுவதாவும், இந்த தொழிலை மேம்படுத்த அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

விவசாயிகளுக்கு மாற்றுப் பயிர் சாகுபடி குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்த வேளாண் விஞ்ஞானிகள் அறிவுறுத்த வேண்டும் என்றும் குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு வலியுறுத்தினார்.

இந்த நிகழ்ச்சியில், ஜார்க்கண்ட் ஆளுநர் திரு. சந்தோஷ்குமார் கங்குவார், மத்திய வேளாண்துறை அமைச்சர் திரு. சிவராஜ்சிங் சௌஹான், முதலமைச்சர் திரு. ஹேமந்த் சோரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

<<<<<<<<>>>>>>>>>

விஸ்வகர்மா திட்டத்தின்கீழ் கடந்த ஓராண்டில் ஆயிரத்து 400 கோடி ரூபாய் பயனாளிகளுக்கு கடன் வழங்கப்பட்டிருப்பதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

மகாராஷ்ட்ரா மாநிலம் Wardha–வில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்துகொண்டு பேசிய அவர், இத்திட்டத்தின்கீழ் பயனடைந்தவர்களில் பெரும்பாலானோர் ஷெட்யூல்டு வகுப்பை சேர்ந்தவர்கள் என்று கூறினார்.

இந்த திட்டத்தின் பயன்களை பெற்று, கைவினைக்கலைஞர்கள், தொழில் முனைவோர்களாகவும், தொழில் அதிபர்களாகவும் உருவாக வேண்டும் என்று பிரதமர் கேட்டுக்கொண்டார்.

இந்த திட்டத்தின்கீழ், ஆறு லட்சத்திற்கும் மேற்பட்ட பயனாளிகளுக்கு நவீன உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளதாக திரு நரேந்திர மோடி தெரிவித்தார்.

<<<<<<<<>>>>>>>>>

ஜார்கண்ட் அரசு வாக்கு வங்கி அரசியலுக்காக பங்களாதேஷிலிருந்து ஊடுருபவர்களை பாதுகாத்து வருவதாக உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா குற்றம் சாட்டியுள்ளார்.

Giridih-ல் என்ற இடத்தில் நடைபெற்ற தேர்தல் பிரச்சார கூட்டத்தில் பேசிய அவர், இம்மாநிலத்தில் ஊடுருவல்காரர்களால் சந்தால் பகுதியின் பூகோள நிலையே மாறியிருப்பதாக கூறினார்.

முன்னதாக, Sahebganj மாவட்டத்தில் நடைபெற்ற கூட்டத்தில் பேசிய அவர், ஜார்கண்டில் பிஜேபி ஆட்சிக்கு வந்தால் 75 வயதுக்கு மேற்பட்ட மூத்த குடிமக்களுக்கு பத்து லட்சம் ரூபாய் வரை இலவச சிகிச்சை அளிக்கப்படும் என்று உறுதியளித்தார்.

<<<<<<<<>>>>>>>>

வங்கிகளின் வளர்ச்சிக்கு யுபிஐ எனப்படும் டிஜிட்டல் பணபரிவர்த்தனை முறையை அதிக அளவில் பயன்படுத்த முன்வர வேண்டும் என்று நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் கேட்டுக்கொண்டுள்ளார்.

புனேயில் நடைபெற்ற மகாராஷ்ட்ரா வங்கியின் 90-ஆவது ஆண்டு விழாவில் பங்கேற்று பேசிய அவர், வாடிக்கையாளர் சேவையை மேம்படுத்தவும், கடன் மதிப்பீடு மற்றும் மோசடி நிதி நடவடிக்கைகளை கட்டுப்படுத்தவும் நவீன தொழில்நுட்பங்களை வங்கிகள் பயன்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தினார்.

வங்கிகளின் எதிர்கால திட்டங்களுக்கு யுபிஐ பரிவர்த்தனைகள் பெரிதும் உதவும் என்றும், உலக அளவிலான டிஜிட்டல் பரிவர்த்தனைகளில் 45 சதவீதம் இந்தியாவிலிருந்து மேற்கொள்ளப்படுவதாகவும் அவர் கூறினார்.

ஆகஸ்ட் மாதத்தில் யுபிஐ மூலமான பரிவர்த்தனை 20 லட்சத்து 60 ஆயிரம் கோடி ரூபாயை எட்டியிருப்பதாக தெரிவித்த திருமதி நிர்மலா சீதாராமன், பூட்டான், நேபாளம், இலங்கை உள்ளிட்ட மேலும் ஏழு நாடுகளில் இந்த பரிவர்த்தனை பயன்பாட்டிற்கு வந்துள்ளதாக குறிப்பிட்டார்.

<<<<<<<<>>>>>>>>

திருப்பதி லட்டு தயாரிப்பில் கலப்பட நெய் பயன்படுத்தப்பட்ட விவகாரம் தொடர்பாக ஆந்திரப்பிரதேச அரசிடம் அறிக்கை கோரப்பட்டிருப்பதாக மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு. ஜெ.பி. நட்டா தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்தப் பிரச்சினை குறித்து ஆந்திர மாநில முதலமைச்சர் திரு. சந்திரபாபு நாயுடுவை தொடர்புகொண்டு தாம் பேசியதாகவும், அறிக்கை வந்தபின்னர் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கூறினார்.

மத்திய உணவுத்துறை அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி, இந்த விவகாரத்தை ஆந்திர முதலமைச்சர் எழுப்பியிருந்ததை சுட்டிக்காட்டினார்.

லட்டு விவகாரம் தொடர்பாக விரிவான அறிக்கை அளிக்கப்பட வேண்டும் என்று கேட்டிருப்பதாகவும், குற்றமிழைத்தவர்கள் தண்டிக்கப்படுவார்கள் என்றும் அமைச்சர் உறுதியளித்தார்.

<<<<<<<<>>>>>>>>

இளநிலை நீட் தேர்வு வினாத்தாள் வெளியான விவகாரம் தொடர்பாக இரண்டாவது குற்றப்பத்திரிகையை மத்திய புலனாய்வு அமைப்பான சிபிஐ பாட்னா சிறப்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளது.

இந்த வழக்கில் ஆறு பேருக்கு எதிராக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இந்திய குற்றவியல் சட்டம் பல்வேறு பிரிவுகளின் கீழ், அவர்களுக்கு எதிராக, குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ஏற்கனவே, 13 பேருக்கு எதிராக கடந்த மாதம் ஒன்றாம் தேதி சிபிஐ முதலாவது குற்றப்பத்திரிகையை தாக்கல் செய்திருந்தது.

இந்த வழக்கில் இதுவரை மொத்தம் 48 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

<<<<<<<<>>>>>>>>

கனமழை, வெள்ளம் காரணமாக, ஜார்க்கண்ட் மாநிலத்திலிருந்து மேற்குவங்கத்திற்கு வாகனங்கள் செல்லும் எல்லைப்பகுதி மூன்று நாட்களுக்கு மூடப்பட்டுள்ளது.

அணைகளிலிருந்து தாமோதர் பள்ளத்தாக்கில் அதிக அளவு தண்ணீர் விடுவிக்கப்படுவதால், நேற்றிலிருந்து எல்லை சாலையை மூடுவதற்கு முதலமைச்சர் செல்வி மம்தா பானர்ஜி உத்தரவிட்டார்.

இதனால், ஜார்க்கண்டிலிருந்து வரும் ஏராளமான லாரிகள் மற்றும் சரக்கு வாகனங்கள் சாலையில் அணிவகுத்து நிற்கின்றன.

இதனிடையே, மேற்குவங்கத்தின் தெற்குப்பகுதியில் நிலவும் வெள்ள நிலைமை குறித்து, பிரதமர் திரு. நரேந்திர மோடிக்கு, செல்வி மம்தா பானர்ஜி கடிதம் எழுதியிருப்பதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<<<>>>>>>>>

தமிழில் பெயர் பலகை வைக்காத வணிக நிறுவனங்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று தமிழ் வளர்ச்சித்துறை அமைச்சர் திரு மு பெ சாமிநாதன் கூறியுள்ளார்.

ஈரோடு மாவட்டம் சென்னிமலையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், அரசின் நலத்திட்ட உதவிகளை பயனாளிகளுக்கு வழங்கிய பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

தமிழில் பெயர் பலகை வைப்பதற்கான கால அவகாசம் கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் வரை வழங்கப்பட்டதை அவர் சுட்டிக்காட்டினார்.

இருப்பினும் சில நிறுவனங்கள் தமிழில் பெயர் பலகை வைக்கவில்லை என்றும் திரு சாமிநாதன் தெரிவித்தார்.

<<<<<<<<>>>>>>>>>

இலங்கையில் அதிபர் பதவிக்கான தேர்தல் நாளை நடைபெறவுள்ளது.

இதையொட்டி, அங்கு சுமார் 13 ஆயிரத்து 400 வாக்குப்பதிவு மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

ஒரு கோடியே 70 லட்சம் வாக்காளர்கள் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர்.

தற்போதைய அதிபர் திரு. ரனில் விக்கிரமசிங்கே, திரு. சஜித் பிரேமதாஸா உள்பட 38 வேட்பாளர்கள் அதிபர் பதவிக்கு போட்டியிடுகிறார்கள்.

நாளை வாக்குப்பதிவு முடிந்ததும், இறுதி முடிவுகள் வரும் ஞாயிற்றுக்கிழமை வெளியாகும் என்று அந்நாட்டு தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

<<<<<<<<>>>>>>>>>

லெபனானின் தெற்கு பகுதியில் நேற்றிரவு இஸ்ரேல் நடத்திய வான்வழி தாக்குதலில் Hezbollah அமைப்பினரின் ஏராளமான ஆயுதங்கள் அழிக்கப்பட்டன.

சுமார் இரண்டு மணிநேரத்திற்கும் மேலாக நடத்தப்பட்ட இந்த தாக்குதலில், ராக்கெட் லாஞ்சர்கள், போர் விமானங்கள் உள்ளிட்டவை சேதமடைந்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதுவரை நடத்தப்பட்ட தாக்குதலில் மிக தீவிரமான தாக்குதல் இது என்று தெரியவந்துள்ளது.

Hezbollah அமைப்பிற்கு சொந்தமான கட்டிடங்கள், ராணுவ கட்டமைப்பு நிலைகளை குறிவைத்து இஸ்ரேல் பாதுகாப்புப்படையினர் தொடர்ந்து தாக்குதலில் ஈடுபட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது.

<<<<<<<<>>>>>>>>>

*<u>விளையாட்டுச் செய்திகள்</u>*

காமன்வெல்த் பளுதூக்கும் சாம்பியன் போட்டியில் இந்தியா 23 தங்கம், 12 வெள்ளி, இரண்டு வெண்கலப்பதக்கங்களை வென்றது.

ஃபிஜுயில் நடைபெற்ற இப்போட்டியில் Parv Choudhary இளையோர் பிரிவிலும், ஜூனியர் பிரிவிலும் தங்கப்பதக்கங்களை வென்றார்.

ஒவியா இளையோர் பிரிவில் தங்கப்பதக்கத்தையும், ஜூனியர் பிரிவில் வெண்கலப்பதக்கத்தையும் வென்றார்.

----------

பங்களாதேஷுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இந்தியா வலுவான நிலையில் உள்ளது.

சென்னையில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் இரண்டாம் நாளான இன்று, ஆட்டநேர இறுதியில் இந்தியா இரண்டாவது இன்னிங்சில் மூன்று விக்கெட் இழப்பிற்கு 81 ரன் எடுத்துள்ளது.

சுப்மன் கில் 33 ரன்னுடனும், ரிஷப் பன்ட் 12 ரன்னுடனும் களத்தில் உள்ளனர்.

முன்னதாக, பங்களாதேஷ் முதல் இன்னிங்சில் 149 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

இதன்மூலம் இந்தியா 308 ரன்கள் முன்னிலை பெற்றுள்ளது.

பும்ரா அபாரமாக பந்துவீசி நான்கு விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

ஜடேஜா, சிராஜ் மற்றும் Akash Deep தலா இரண்டு விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

-----------------

உலக கோப்பை Taekwondo போட்டியில் இந்தியா ஒரு வெள்ளி, ஒரு வெண்கலப்பதக்கம் வென்றது.

ஆடவர் 58 கிலோ பாரா பிரிவில் மோகி சிங் வெள்ளிப்பதக்கத்தையும், மகளிர் 46 கிலோ எடைப்பிரிவில் சோனியா பரத்வாஜ் வெண்கலப்பதக்கத்தையும் வென்றனர்.

----------

ஆஸ்திரேலியாவில் நடைபெற்றுவரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் அங்கிதா ரெய்னா - இங்கிலாந்தின் Naiktha Bains இணை இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

இன்று நடைபெற்ற மகளிர் இரட்டையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் இந்த இணை 5-7, 6-4, 10-7 என்ற செட் கணக்கில், இந்தியாவின் Shrivalli Rashmikaa Bhamidipaty - ஆஸ்திரேலியாவின் Tennika Mcgiffin இணையை வென்றது.

------------

Hangzhou ஓபன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ஜீவன் நெடுஞ்செழியன் - விஜய் சுந்தர் பிரசாந்த் இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

----------------

சுவிட்சர்லாந்தில் நடைபெறவுள்ள உலக சைக்கிள் சாம்பியன் போட்டியில் பங்கேற்பதற்கான இந்திய அணி இன்று Zurich புறப்பட்டு சென்றது.

---------------

சென்னையை அடுத்த ரத்னமங்கலத்தில் தென் மண்டல சிபிஎஸ்இ பள்ளிகளுக்கு இடையேயான கோ கோ போட்டிகள் இன்று தொடங்கின.

800-க்கும் மேற்பட்டோர் இதில் பங்கேற்றுள்ளனர்.

<<<<<<<<>>>>>>>>>